#

பெண்ணின் பெருமை அறிந்து நடக்கும் -

# அகமாற்றம் தேவை - 10

இறைத்தன்மையாகிய அன்பு என்னும் தெய்வீகசக்தியின் வெளிப்பாடுதான் மனிதப் படைபிடம் அமைந்துள்ள நற்பண்புகளும். தீய பண்புகளும். ஆம் தீய பண்புகளும் அனிபின் எதிர்மறை வெளிப்பாடுகளே! ஆவரவரின் கர்மாவிற்கேற்ப இப்பண்புகளின் கலவை பல்வேறு விதத்தில் அமைக்கப்பட்டு ஆண், பெண் பிறவிகளாக இப்பூமியில் பிறந்தாலும், அடிப்படையாக ஆணக்கு அறிவு கற்றுக் கூடுதலாகவும் பெண்ணிற்கு அன்பு சற்றுக் கூடுதலாகவும் அளிக்கப்பட்டிருப்பதாகத்தான் கூறப்பட்டிருக்கின்றது. இறைவனின் அற்புத படைப்பு பெண். யாரோ ஒரு அறிஞர் சொன்னார், "தான் எல்லா இடத்திலும் நிறைந்திருப்பதை உணர்த்துவதற்காகவே இறைவன் பெண்ணைப்படைத்தான்" என்று. உண்மையும் அது தான். பெண்ணின் இணல்பே அன்பு தான். எனவே தான் அன்புப் பெருக்குடன் அரவணைத்துச் செல்லும் ஆணைப் பெண்ணான உணர்ந்து தாயுமானவன் என்று கூறுகின்றனர். பெண்மைக்குரிய பண்பு, அன்பைப் பொழிதல் என்பது இதிலிருந்து புலப்படுகின்றது இல்லையா?

இப்படிப்பட்ட பெண் இன்று எப்படி இருக்கின்றாள்? தன் பெருமை உணர்ந்து, எல்லோராலும் போற்றப்படுகின்ற தன்மையில் இருக்கின்றாளா? துன் நிலை உணர்ந்து, தன் குடும்ப சூழ்நிலை புரிந்து, அதற்கேற்ப நடந்து கொண்டு, தன்னையும் தன் குடும்பத்தையும் உயர்த்துகின்ற பண்பு அரளில் மலர்ந்திருக்கின்றதா? அல்லது அவள் பெண்மையற்றவளாகப் பிறருக்குத் துள்பத்தையும் தொல்லைகளையும் தரக்கூடியவளாக நடந்து கெபள்கிறாளா? இவை ஒவ்வொரு பெண்ணும் தனக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள்.

பொதுவாக ஓர் ஆணிற்கு எல்லா விதத்திலும் துணையாக இருந்து உதவுகவளாகடீவ பெண் படைக்கபட்டிருக்கிறாள். இந்த உண்மையைப் புரிந்துகொண்டவர்கள் பெண்மையைப் போற்றி அவளை மதிப்பாக நடத்தி அதன் மூலம் தாங்கள் உயர்வு பெறுகிறார்கள். ஒருவரது எல்லா உயர்வுகளையும் சீர்குலைத்துச் சிதைப்பது அறியாமையும், ஆணவமும் தான். நான் என்னும் அகங்காரம் எங்கு அதிகமாகத் தழலயெடுக்கின்றதோ அங்கு அன்பு அடிபட்டுப் போய்விடுகின்றது. எனவே தான் இன்று ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கின்ற ஆண் அல்லது பெண் பலவித அவதிகளுக்கு உள்ளாகின்றனர்.

இன்றைய சமூகச் சூழ்நிலையில் ஆணை விடப் பெண்ணிற்குத்தான் சகல உரிமைகளும் அதிகமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கமும் பெண்களுக்கு எத்தனையோ சலுகைகளை வாரி வழங்கியிருக்கின்றது. அதிலும் கனேடிய அரசு பெண்களுக்கும், முதியவர்களுக்கும் வழங்கி வஜம் சலுகைகளும், மதிப்பும் பாராட்டுதலுக்குரியது. (இப்போதய அரசு மனளிர்கான சில சலுகைகளை ரத்து செய்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது) இந்த நிலையில் ஒரு பெண் தன் பெருமை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

சின்ன வயதில் பெற்றோருக்கு: திருமணம் ஆனபின் கணவனுக்கு, கடைசி காலத்தில் பிள்ளைகளுக்கு அடங்கித்தான் இன்று ஒரு பெண் வாழ வேண்டியிருக்கிறது என்ற செய்திகளெல்லாம் பழைய கதைகளாகப் போய்விட்டன. இன்று யாரும் யாருக்கும் அடங்கி நடக்கத் தேவையில்லை என்ற நிலை உருவாகிவிட்டது. . இன்றைய பெண் அன்பால் வாழும் தன் தன்மையை மறந்து, ஆசைகளால் வாழும் நிலமைக்குப் போய்விட்டாள். அதனால் அவதிப்படும் ஆண்கள் ஏராளம். பெண்கள் தாங்கள் கொடுமைப்படுத்தப்படுவதாக புலம்பிய காலம் போய், இன்று ஆண்கள் வெளியில் எதையும் சொல்ல முடியாமல் புழுங்குகின்ற காலம் வந்துவிட்டது. இன்றைய பெண்கள் அழகிற்கும், ஆடம்பரங்களுக்கும், தற்பெருமைக்கும், போட்டி பொறாமைக்கும் நிலைக்களனாகப் போய்விட்டனர். அவர்களின் இந்தப் போக்கால் குடும்ப அமைதி பெருமளவிற்கு நிலைகுலைந்து கொண்டிருக்கிறது. பெண் சுதந்திரம் என்ற பெயரில் ஏதேதோ கொடுமைகளும், விரும்பத்தக்காத மாற்றங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்நிலை இனி வளரக்கூடாது.

பெண் என்பவள் தன்னைத் தானே யார் என்று புரிந்துகொள்ள வேண்டும். தீய குணங்களை அறவே அழித்து. நற்குணங்களால் முழலதுமாக நிரம்பி, தெளிந்த ஞானத்தால் தன் குடும்பத்தைக்கொண்டு செல்பவளாக ஒரு பெண் திகழ வேண்டும். தன் வீட்டுப் பெண்களால

#
ஆண்கள் பெருமை கொண்டு வாழும் விதத்தில் ஒரு பெண் நடந்துகொள்ள வேண்டும் இயல்பாகவே தியாக மகப்பான்மையும், இரக்க சுபாவமும், நுண்ணறிவுத் திறனும்.மனோ வலிமையும் கொண்டிருக்கும் பெண், கோபம், பொறாமை, சந்தேகம், அடக்கமின்மை, அதிக ஆசை போன்ற துர்க்குணங்கள் இல்லாதவளாகத் தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டும். இப்படி பொறுமை காத்துப் பொறுப்புடன் தொடர்ந்து செயல்பட்டுகொண்டிருக்கும் பெண்ணைத் தறிகெட்த் தான்தோன்றித்தனமாய் நடந்து கொண்டு வேதனைப்படுத்தும் ஆண்களும் நிறைய இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆண் என்றேனும் ஒரு நாள்ஈ எதாவது ஒரு சூழ்நிலையில் தன் தவறை உணர்வான். அன்று அவன் அகங்காரத்தைவிட்டு விலகி, அவளது பெருமையை உணர்ந்து அன்பால் இணைவான்.

ஒரு பெண் அடங்கிப்போவதையோ, அனுசரித்து விட்டுக்கொடுத்துப் போவதாலோ, தியாக உணர்வுடன் செயல்படுவதாலோ, பொறுமை காப்பதாலோ எவ்விதத் தீமையும் ஏற்படுவதில்லை. மாறாக இவையெல்லாம்அவளது குடும்பத்தை அமைதி வழியில் கொண்டு செல்ல உதவும். ஒருவருக்கொருவர் அன்பை இழந்து கத்தி கூச்சலிட்டு சண்டை போடுவதும், அதைக் கண்டு குழந்தைகள் மிரண்டு போய்த் தடுமாறுவதும் ஒரு நல்ல குடும்பத்திற்கு அழகல்ல. பிரச்னை என்பது இருவருக்கும் தான். இதைப் புரிந்துகொண்டு, வந்துவிட்ட பிரச்னையை எப்படித் தீர்ப்பது? என்ன செய்யலாம்? என்று தான் யோசித்து நடக்க வேண்டுமே தவிர, நீயா,நானா? என்று நின்றால் பிறகு அந்தக் குடும்பத்தின் நிலை என்ன?

ஆன்மீகத் தளத்தில் நன்று பார்க்கின்றபொழுது எனது ஆசைகளின் பட்டியல்தான் இன்றைய இந்த வாழ்க்கை என்பது புரியும். இதில் வருபரவ எல்லாம் எனது கர்மாவால் எனக்கு வருகின்றன. இதை எதிர்த்துதநின்று ஆடவதால் நான் என் கர்மாவை அதிகப் படுத்துகின்றேன். ஏனென்றால் இந்த வாழ்க்கை, இதில் வரும் சம்பவங்கள் எல்லாமே நீர்க்குமிழி போலத்தான். உயிர் போனவுடன் உடல் கீழே சாய்ந்துவிடும். பிறகு ஊருமில்லை,உறவுமில்லை. இந்த உண்மையைப் புரிந்துகொண்டுவிட்டால் ஆணுக்கோ, பெண்ணுக்கோ அகங்காரம் போய்விடும். பிறகு அங்கு மிஞ்சியிருப்பது அன்பு மட்டுமே. ஆந்த அன்பை மூலதனமாக்கி, உறவுகளை அணுகிச் செயல்படுகின்றபொழுது ஆணென்றாலும் பெண்ணென்றாலும் வரியாகச் செயல்பட முடியும். யார் மீதும் பகை தோன்றாது. வருபவற்றை ஏற்கின்ற பக்குவமும் ஏற்படும். இந்த நிலையை ஒரு பெண் உணர்ந்துவிட்டால், அவள் பெருமைக்குரிய பெண். அவளைப் புரிந்துகொண்டு அதே அன்பு வழியில் நடக்கின்ற ஆண், பெண்மையை மதித்துப் போற்றுகின்ற ஆண். இப்படிப்புட்டவர்களின் குடும்பம் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த குடும்பம். இங்கு கர்மாவால் பிரச்னைகள் வரும். ஆனால் அவை இக்குடும்ப ஒற்றுமையின் காரணமாக வலுவிழந்துத் தாமாகவே வந்த விதத்தில் தீர்ந்துபோகும். இவ்வாறு உயர்ந்த விதத்தில், அமைதி தன்மையில் தனது வாழ்க்கையைக் கொண்டு செல்ல, ஒவ்வொரு பெண்ணும் முயற்சி செய்கின்றபொழுது அத்தகைய பெண்களால் சமுதாயம் மேன்மையுறும். சமூகச் சூழ்நிலை சாந்தியடையும்.

எனவே பெண்ணின் பெருமைகளைப் பெண்கள் முதலில் புரிந்துகொள்ளுங்கள். பெண்ணிற்குப் பெண்ணே எதிரி! ஏன்று வாழாமல் புறம்பேசித் திரியாமல், பெண்கள் உலகின் கண்கள்! என்று போற்றும் விதத்தில், உயர்ந்த தரத்தில் வாழ மறப்படுகின்ற அகமாற்றம் பெண்களுக்குத் தேவை. இத்தகைய பெண்களைக் கொடுமைப்படுத்தாமல் அவளது எளிமையால், தான் வலிமை பெற்றுச் சகல விதத்திலும் அவளை அனுசரித்துச் செல்கின்ற அகமாற்றம் ஆண்களுக்குத் தேவை.